FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

Under section 173 BNSS

C 8167278

1. District : கடலூர் மாவட்டம் | PS: உஉத.க. பிரிவு காவல்நிலையம் | Year: 2025 ஆண்டு | FIR No.: 10/2025 மு.த.அ. எண் | Date 18.10.2025 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by The Prevention Corruption (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Bharatiya Nagarik Suraksha Sanhita | Sections பிரிவுகள்: 102
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 17.10.2025 | Date to : நாள் வரை 17.10.2025
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 13.20 hrs | Time to : நேரம் வரை 17.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.10.2025 | Time : நேரம் 12.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - III | Time : நேரம் 12.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 33 கி.மீ. தென்மேற்கு.
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி சார் பதிவாளர் அலுவலகம், காடாம்புலியூர்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்-

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் B.சுஜாதா | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு என்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் ---- | Place of Issue : வழங்கப்பட்ட இடம் ----
(f) Occupation : தொழில் ஆய்வுக்குழு ஆய்வாளர் | (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கடலூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) M.ஈஸ்வரி, பொறுப்பு சார் பதிவாளர், காடாம்புலியூர் சார் பதிவகம்.
2) A.பழனி, ஆவண எழுத்தர், காடாம்புலியூர்.
3) T.திருமூர்த்தி, DTP சென்டர் உரிமையாளர், காடாம்புலியூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நான் இன்று 18.10.2025 ஆம் தேதி பகல் 12.30 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திருமதி.B.சுஜாதா, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு : அனுப்புநர் B.சுஜாதா, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கடலூர். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். ந.க.எண்.A/685/2025 நாள் : 18.10.2025 பொருள் : திடீர் ஆய்வு சோதனை – காடாம்புலியூர் சார்பதிவகம் – கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் ரொக்கப்பணம் ஒப்படைப்பு – நடவடிக்கை வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக. கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட

(தொடர்ச்சி பக்கம்–3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

18.10.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. SUNDARRAJI
Rank: நிலை Inspector of Police No. எண் .....
VSAC, Cuddalore

ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் ஆய்வுக்குழு ஆய்வாளரான பா.சுஜாதா ஆகிய நான் 17.10.2025 ஆம் தேதி எனது அலுவலகத்தில் இருக்கும்போது கடலூர் மாவட்டம், காடாம்புலியூர் சார் பதிவாளர் அலுவலகத்தில், பத்திரப்பதிவுக்காக அலுவலகம் வரும் பொதுமக்களிடம் ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலம் லஞ்ச பணம் பெற்று வைத்துள்ளார் என்ற ரகசிய தகவல் எனக்கு கிடைத்தது. பின்னர் உடனடியாக நான் புறப்பட்டு எங்களது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு அன்றே காலை சுமார் 11.30 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த காவல் ஆய்வாளர் ச.சுந்தரராஜ் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி காடாம்புலியூர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு மதியம் சுமார் 13.00 மணிக்கு மேல் சென்றால் அங்கு காடாம்புலியூர் சார் பதிவாளர் அவர்களுக்கு கொடுக்க உள்ள மற்றும் ஏற்கனவே பெற்று வைத்துள்ள பணத்தை திடீர் ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், காவல் ஆய்வாளர் திரு.ச.சுந்தரராஜ் அவர்கள் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், காவல் ஆய்வாளர் திரு.ச.சுந்தரராஜ் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் பகல் சுமார் 12.15 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு வடக்கு தெற்காக செல்லும் பண்ருட்டி – கும்பகோணம் சாலையின் கிழக்கு புறமாக அமைந்துள்ள காடாம்புலியூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சற்று தொலைவில் வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் காடாம்புலியூர் சார் பதிவாளர் அலுவலகத்தை கண்காணித்து பின்னர் மதியம் சுமார் 13.20 மணிக்கு வடக்கு பார்த்தவாறு உள்ள நுழைவு வாயில் வழியாக சென்று, மேற்கு பார்த்தவாறு அமைந்து இருக்கும் காடாம்புலியூர் சார் பதிவாளர் அலுவலக கட்டிட வளாகத்திற்குள் சென்று மெயின் கேட்டை அடைத்து பாதுகாப்பிற்கு காவலரை நியமித்து பின்னர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். பிரதான வாயிலின் வலது புறம் உள்ள இருக்கையில் அமர்ந்திருந்த சார் பதிவாளர் அவர்களிடம் என்னையும், காவல் ஆய்வாளர் மற்றும் ஆய்வு குழுவினரையும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் சார் பதிவாளர் அவர்களை விசாரித்தபோது அவர் தனது பெயர் M.ஈஸ்வரி, வயது 43, க/பெ ஆனந்தன், உதவியாளர், திருநாவலூர் சார்பதிவகம் என்றும். தற்போது காடாம்புலியூர் சார்பதிவகத்தில் பொறுப்பு சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். சார் பதிவாளர்

18/10/25

அலுவலகத்தில் இருந்த நபர்களை விசாரித்தபோது, (1) L.அருண்பாண்டியன், த/பெ, லூக்கா, Camera Operator (TCS –ZICMA) , (2) சூர்யா பழனி, த/பெ, பழனி, டேட்டா என்ட்ரி ஆபரேட்டர், (3) பழனி, த/பெ, அண்ணாமலை, ஆவண எழுத்தர், (4) திருமூர்த்தி, த/பெ, தில்லைகோவிந்தன், இனியா பேப்பர் ஸ்டோர்ஸ் என்று தெரிவித்தனர். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை ஆய்வு செய்ய போகும் விவரத்தை அவர்களிடம் தெரிவித்து, சோதனைக்கு உடனிருந்து ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டேன். மேலும் சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அங்கிருந்தவர்கள் முன்னிலையில் சுய சோதனை செய்து குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை தெரியப்படுத்தினோம். மேற்படி காடாம்புலியூர் சார்பதிவாளர் அலுவலகமானது சுற்றுசுவற்றுடன் கூடிய அரசு கட்டிடமாகும். இதன் பிரதான வாயிற்படி மேற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தின் வராண்டா சுமார் 4க்கு 12 அடி நீள அகலமுள்ளது. அதனையடுத்து சார்பதிவாளர் இருக்கை அமைந்துள்ள ஹாலானது 18க்கு 30 அடி நீள அகலமுள்ளது. அங்கு வடக்கு பார்த்து போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்த சார் பதிவாளர் திருமதி.M.ஈஸ்வரி என்பவரது கைப்பையை சோதனை செய்ய அதில் ரூ.3000/– இருந்தது. மேற்படி பணம் பற்றி விசாரிக்க தான் காலை அலுவலகம் வரும்போது ரூ.5,000/– எடுத்து வந்ததாகவும், தனது காருக்கு டீசல் போடுவதற்காக ரூ.2,000/– டிரைவரிடம் கொடுத்து அனுப்பியதாகவும், அதில் மீதி பணம் என தெரிவித்தார். அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் பண கையிருப்பு பதிவேட்டில் இன்றைய தேதியில் ரூ.5000 என பதிவு செய்யப்பட்டிருந்ததால் மேற்படி பணத்தை அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி பதிவேட்டை பார்வையிட்டதில் 05.08.2025 முதல் 17.10.2025 வரை தொடர்ச்சியாக தினமும் ரூ.5,000/– என பதிவு செய்யப்பட்டிருந்தது. அது சம்மந்தமாக அவரை விசாரிக்க அவர் தான் தினமும் வீட்டிலிருந்து ரூ.5000/– கொண்டு வருவதாக தெரிவித்தார். பின்னர், அவரது மேஜையானது சோதனை செய்யப்பட்டதில், பணம் ஏதும் இல்லை. மேற்படி சார்பதிவாளர் இருக்கைக்கு இடதுபுறம் கிழக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த L.அருண்பாண்டியன், த/பெ, லூக்கா, Camera Operator (TCS –ZICMA) என்று தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.140/– இருந்தது. அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் பண கையிருப்பு பதிவேட்டில் ஏன் பதிவு செய்யவில்லை என்று கேட்டதற்கு நிரந்தர பணியாளர்கள் மட்டும் தான் பதிவு செய்வார்கள் என்றும், தனியார் பணியாளர்கள் பதிவு செய்வது இல்லை என

18/10/25

தெரிவித்தார். மேற்படி பணம் பற்றி விசாரிக்க மதிய உணவு சாப்பிடுவதற்காகவும், பேருந்தில் செல்வதற்காகவும் எடுத்து வந்த பணம் என தெரிவித்ததின் பேரில் மேற்படி பணம் ரூ.140/– அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது மேஜையினை சோதனை செய்ததில், கைப்பற்றக்கூடிய பணம் ஏதும் இல்லை. அந்த இருக்கைக்கு அடுத்து கிழக்கு பார்த்தவாறு போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவரது பெயர் சூர்ய பழனி என்றும், தான் டேட்டா என்டரி ஆப்பரேட்டராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.370/– இருந்தது. அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் பண கையிருப்பு பதிவேட்டில் ஏன் பதிவு செய்யவில்லை என்று கேட்டதற்கு நிரந்தர பணியாளர்கள் மட்டும் தான் பதிவு செய்வார்கள் என்றும், தனியார் பணியாளர்கள் பதிவு செய்வது இல்லை என தெரிவித்தார். மேற்படி பணம் பற்றி விசாரிக்க மதிய உணவு சாப்பிடுவதற்காகவும் தனது இருசக்கர வாகனத்திற்கு பெட்ரோல் போடுவதற்காகவும் எடுத்து வந்த பணம் என தெரிவித்ததின் பேரில் மேற்படி பணம் ரூ.370/– அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது மேஜையினை சோதனை செய்ததில், அதில் கைப்பற்றக்கூடிய பணம் ஏதும் இல்லை. ஹாலில் நின்றிருந்த நபரை விசாரிக்க தனது பெயர் பழனி என்றும், தான் ஆவண எழுத்தர் என்றும், இரண்டு அடமான பத்திரம் மற்றும் ஒரு பாக பத்திரம் பதிவு செய்வதற்காக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரது வலது பேன்ட் பாக்கெட்டில் ரூ.5,800 (500x11, 100x3) இருந்தது. மேற்படி பணம் பற்றி விசாரித்ததில் சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் சார்பதிவாளர் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சம் கொடுப்பதற்காக கொண்டு வந்த பணம் என கருதி மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் ஹாலில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் திருமூர்த்தி என்றும், தான் இனியா பேப்பர் ஸ்டோர்ஸ் மற்றும் கம்ப்யூட்டர் சென்டர் வைத்துள்ளதாகவும், தான் ஆவணங்களை தயார் செய்து வழக்கறிஞர் ரிஷி என்பவரிடம் கைப்யொப்பம் பெற்று பத்திர பதிவு செய்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரது வலது மற்றும் இடதுபுற பேன்ட் பாக்கேட்டில் ஐநூறு ரூபாய் நோட்டுகள் இரண்டு கட்டுகளாக இருந்தது அவற்றை எண்ணிப்பார்க்க ரூ.1,00,000/– (500x200) இருந்தது. மேற்படி பணத்தை பற்றி விசாரிக்க அவர் சரியான முகாந்திரம் எதுவும் கூறாததால் சார்பதிவாளர் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சம் கொடுப்பதற்காக கொண்டு வந்த பணம் என கருதி அதனையும் மேல்நடவடிக்கைகக்காக கைப்பற்றப்பட்டது. ஹாலில்

18/10/25

இருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் வீரவிஸ்வாமித்திரர், த/பெ. பழனிவேல் என்றும், தான் இரண்டு அடமான பத்திரத்தை திருமூர்த்தி என்பவர் மூலம் பத்திரப்பதிவு செய்ததாகவும், பத்திர நகல் பெறவேண்டி காத்திருப்பதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்து பார்க்க அவரிடம் பணம் எதுவும் இல்லை. அதனை தொடர்ந்து ஹாலுக்கு கிழக்கில் அமைந்துள்ள பதிவறையை சோதனை செய்ய அங்கு கைப்பற்றக்கூடிய பணம் ஏதும் இல்லை. அதனை தொடர்ந்து ஹாலுக்கு வடக்கில் உள்ள கணினி அறையின் வெளியில் 2 நபர்கள் சேரில் அமர்ந்திருந்தார்கள் அவர்களை விசாரிக்க அதில் 1) திரு.பூவராகவன், த/பெ.கலியபெருமாள், முன்னாள் காடாம்புலியூர் பஞ்சாயத்து தலைவர் என்றும், தான் ஒரு பத்திர பதிவு செய்ய வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.100/– இருந்தது. அந்த பணத்தை பற்றி விசாரிக்க தான் செலவுக்காக கொண்டுவந்த பணம் என தெரிவித்ததால் அவரிடம் அந்த பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவர் பக்கத்தில் அமர்ந்திருந்த 2) ராஜ்குமார், த/பெ. சொக்கலிங்கம் என்றும், தான் வீரவிஸ்வாமித்திரன் என்பவருக்கு ஓட்டுநராக பணிபுரிவதாகவும், அவரது பத்திர பதிவுக்கு சாட்சி கையொப்பம் செய்ய சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.700/– இருந்தது. மேற்படி பணம் பற்றி விசாரிக்க தனது செலவுக்கு வைத்திருந்ததாக தெரிவித்ததின் பேரில் ரூ.700/– அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி இடத்தை சோதனை செய்ததில் கணிப்பொறி மேஜையின் Key board வைக்கும் இடத்தில் கட்டு கட்டாக பணம் இருந்தது. அதனை எண்ணிப்பார்த்த போது ரூ.1,10,000/– (500x214, 200x11, 100x8) இருந்தது. மேற்படி பணம் சம்மந்தமாக பொறுப்பு சார்பதிவாளரை விசாரிக்க அந்த பணத்தை பற்றி தனக்கு ஏதும் தெரியாது என தெரிவித்தார். மேற்படி பணம் சம்மந்தமாக யாரும் உரிமை கோராததால் சார்பதிவாளர் அலுவக ஊழியர்கள் லஞ்சமாக பெற்று வைத்திருந்த பணம் என கருதி மேல்நடவடிக்கைக்காக மேற்படி பணம் ரூ.1,10,000/– கைப்பற்றப்பட்டது. 17.10.2025ந் தேதி எனது தலைமையிலான திடீர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.2,15,800/–, 1) M.ஈஸ்வரி, பொறுப்பு சார்பதிவாளர், காடாம்புலியூர் சார்பதிவகம், 2) A.பழனி, ஆவண எழுத்தர், 3) T.திருமூர்த்தி, DTP சென்டர் உரிமையாளர், ஆகியோர்களது வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், தடயப்பொருட்கள் மற்றும் தயார் செய்யப்பட்ட திடீர் ஆய்வு மகஜர் ஆகியவற்றுடன் இன்று 18.10.2025ந்தேதி காலை 12.30 மணிக்கு, கடலூர் ஊழல்

18/10

தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி புகார் மனுவை தங்களிடம் கொடுக்கிறேன். காடாம்புலியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் இடைத்தரகர்கள் மற்றும் பத்திர எழுத்தர்களை அனுமதித்ததற்காகவும், கணக்கில் வராத பணம் கைப்பற்றப்பட்டதற்காகவும் 1) M.ஈஸ்வரி, பொறுப்பு சார் பதிவாளர், காடாம்புலியூர் சார் பதிவகம், 2) A.பழனி, ஆவண எழுத்தர், காடாம்புலியூர், 3) T.திருமூர்த்தி, DTP சென்டர் உரிமையாளர், காடாம்புலியூர் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். கடலூர். ஒப்பம் ------ (G.சுஜாதா) ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கடலூர்.

Madam Submitted,

Received the above computer typed complaint on 18.10.2025 at about 12.30 hours, hence I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption Cr.No.10/2025, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 and Section 102 BNSS on 18.10.2025 at 13.00 hours. sd/- xxxx 18.10.2025 (S.SUNDRARAJ), Inspector of Police, V&AC, Cuddalore.

18/10/25

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Cuddalore